• மாத இதழ் • ஆகஸ்டு '86 • 60 காசு

66

# சுட்டி



அன்று: வெறும் "அட்டை 'கத்தி'" இவரைக் கதாநாயகனாக்கியது.

இன்று: நிஜ "கத்தி" இவரை வில்லனாக்குமோ?

FREE E - BOOKS , www.thamizham.net.,

FREE E - BOOKS , www.thamizham.net.,

## சுட்டி இலவசம்

சுட்டி இலவசம்: சுட்டியைக் கேள்விப் படாத, விரும்பி ஏற்கக் கூடிய நண்பர்களின் முகவரிகளை அனுப்புங்கள். அவர்களுக்கு உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம். எவ்வளவு முகவரிகள் வேண்டுமானாலும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பலாம்.

## சுட்டி வரவில்லை

சுட்டி ஒழுங்காக வந்து சேருவதில்லை' என்று சில சந்தாதாரர்கள் மௌனமாக க் குறைபட்டுப் பயனில்லை. என்ன முயற்சி எடுத்தும் சில சுட்டி இதழ்கள் அஞ்சலில் திருடப்படுவது தவிர்க்க முடியாதிருக்கிறது. சந்தா முடிய காலமிருந்தும் 15 ஆம் தேதிக்குள் சுட்டி கிடைக்கப் பெற சந்தாதாரர்கள் சந்தா எண் குறிப்பிட்டு (மறந்தால், பெயர் முகவரி) எழுதினால் மீண்டும் ஒரு முறை அனுப்புகிறோம். வேறு வழியில்லை.

## சுட்டி சந்தா

சுட்டி சந்தா: 12 இதழ்கள் அஞ்சலில் பெற ரூ 7.00 பணவிடை செய்யுங்கள்.

## சுட்டி முகவரி

எல்லாத் தொடர்புகளுக்கும்: "சுட்டி", 1494, அண்ணாநகர், சென்னை 600 040

## முன் இதழ்கள்


இதழுக்கு 45 காசு வீதம் அஞ்சல் தலை/பணவிடை அனுப்பினால் அஞ்சலில் உங்களுக்கு வந்து சேரும்.

சுட்டி முன் இதழ்கள் எண்: 1 முதல் 28, 30, 54 தவிர பிற இதழ்கள் யாவும் கிடைக்கும். 50 வது இதழ் 0.75 காசு



## ஜெயவர்த்தன ஒரு தமிழரே!

தமிழ் நாட்டின் கிழக் கரையைச் சேர்ந்த தம்பி முதலியார் என்பவரின் கொள்ளுப் பேரன் தான் இப்போதைய இலங்கை அதிபர் ஜே ஆர் ஜெயவர்த்தன 19ம் நூற்றுண்டின் துவக்கத்தில் ஜெயவர்த்தனவின் கொள்ளுத் தாத்தா தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்குக் குடியேறி அங்கே டச்சுக்காரர்களுக்கு வரி வசூலித்துக் கொடுக்கும் தண்டல்காரராக் வேலை பார்த்தாராம் பிறகு, இவர்கள் 'ஜெயவர்த்தன' என்கிற குடும்பத்தில் பெண் எடுத்து திருமணம் செய்து கொண்டதால் 'ஜெயவர்த்தன' என்பதே இவர்களின் குடும்பப் பெயராகவும் மாறிவிட்டது இது 1833ம் ஆண்டு இலங்கை அரசு கெஜட்டில் உள்ளது என்கிருர் தமிழ் ஈழ விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் திரு எம் கே ஈழ வேந்தன்



## விண்வெளியில் எலிகள்!

விண்வெளிப் பயணம் செய்வதால் உடல்வளர்ச்சி பாதிக்கப்படுகிறதா என்பதை அமெரிக்க விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்கிருர்கள்.

1985 ஏப்ரல் மாதம் அமெரிக்க விண்வெளிக் கப்பலில் 24 எலிகள் பயணம் செய்து திரும்பின. அந்த எலிகளை ஆராய்ந்தார்கள்.

மூளையில் பிட்யூட்டரி சுரப்பியிலிருந்து வெளிப்பட்டு இரத்த ஓட்டத்தில் சேரும் பல்வகை நுண்ணிய ரசாயனப் பொருள்களில் சில, தசைகள் மற்றும் எலும்புகளின் வளர்ச்சியைத் தூண்டுகின்றன.

விண்வெளிப் பயணம் செய்த எலிகளின் பிட்யூட்டரிகளிலிருந்து வளர்ச்சி ஹார்மோன்கள் சுரப்பது குறைந்திருக்கிறது என்று கண்டு பிடித்தார்கள். பயணம் செய்த எலிகளின் எலும்புகளும் தசைகளும் வலுவிழந்துவிட்டன. தொய்வு அடைந்துவிட்டன.

இந்தநிலை,விண்வெளியில்பயணம் செய்யும் மனிதர்களுக்கும் ஏற்படுமா என்பதை ஆராய்கிருர்கள்.

-கோகுலம்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# ஆபீசர்ஸ் கிளப் யாருக்காக?

ஜனநாயகம், குடியரசு, எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்று கூறிக்கொண்டே, உள்ளவருக்கு வாய்ப்பும், இல்லாதவருக்கு ஏய்ப்பும் என்ற நிலைதான் நாட்டில் நடைமுறையில இருந்து வருகிறது. உதாரணமாக 'ஆபீசர்ஸ் கிளப்' எனபதாக ஒவ்வொரு நகரிலும் உள்ள அரசு அதிகாரிகளுக்கென உள்ள கிளப்புகளில் ஊரிலுள்ள பெரும் புள்ளிகளையும் பணக்காரர்களையும் உறுப்பினராக்கிக் கொண்டு, அங்கு பணம் படைத்தோரும், அதிகாரிகளும் கூடிக் கூத்தடிப்பதும், அதே அதிகாரிகளை அப்பாவி ஏழைகள் குடியானவர்கள் ஆகியோர் விண்ணப்பங்கள் கொடுக்க 'எசமான தரிசனத்திற்கு' காத்துக் கிடப்பது போல் வைப்பதுமாக உள்ள நிலை ஜனநாயகம் என்பதையே கேலிப் பொருளாக்கி வருகிறது. எனவே 1) ஆபீசர்ஸ் கிளப் எனப்படுவதில், ஆபீஸர் அல்லாத தனியார் யாரும் உறுப்பினராக இருப்பதைத் தடை செய்ய வேண்டும்.

நாட்டில உள்ள அரசு அதிகாரிகள், நீதிபதிகள், தலைவர்கள் ஆகியோர் தனிப்பட்ட முதலாளிகளின் பங்களாக்களில் விருந்தினர் விடுதிகளில் தங்கி அவர்கள் தரும் வசதிகளை அனுபவிப்பது மக்கள் விரோதச்செயலாகும். உள்ளவருக்கும் இல்லாதவருக்கும் பொதுவாக இருப்பதாக அரசு அதிகாரிகள், பணம் படைத்தோர் தரும் சொகுசு வசதிகளில் சொக்கிக் கிடந்தால் பின் மக்கள் தரப்பில் சிந்தனை எப்படி ஓடும்? அதேபோல ஏழைத் தொண்டர்கள் கொடி பிடித்து, கோஷம் போட்டு உயரும் தலைவர்கள், சுரண்டிக் கொழுக்கும் சுகபோகிகளின் 'விருந்தினர் விடுதி'களின் சவுகரியங்களை அனுபவித்தால பின் சாமான்யர் சார்பில் முடிவெடுக்க அவர்களால் எங்ஙனம் இயலும்? எனவே 2) இந்நாட்டு அரசு அதிகாரிகள், தலைவர்கள் ஆகியோர் தனிப்பட்ட வசதிக்காரர்களின் 'விருந்தினர் மாளிகை' சென்று தங்குதல் கூடாது.

திருச்சி மாவட்டப் பொதுத் தொழிலாளர் சங்கம் கரூரில் மேதின விழாவைக் கொண்டாடியபோது மேற்கண்ட தீர்மானங்களையும் நிறைவேற்றியுள்ளது.

'இந்தியா ஒரு ஜனநாயக நாடு' — சாமான்யர்களே இன்று இதை சந்தேகிக்க ஆரம்பித்து விட்டார்கள். —நிலா

FREE E - BOOKS , www.thamizham.net.,



உனக்கு
எதைத்தான் தரவில்லை
யாம்
இந்த
சுதந்திரம்—
"உணவு, உடை,
உறைவிடம்"
இது மூன்றைத் தவிர?

...கோவை கிருபாகரன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

பேட்டி

# கவிஞர் மு. மேத்தா அவர்களுடன்



**"ஆசிரியர் போராட்டங்களில் உங்கள் கருத்து என்ன? சமீபத்தில் ஊதிய முரண்பாட்டுப் பிரச்சனை அடிப்படையில் ஏற்பட்ட ஆசிரியர் போராட்டங்களில் நீங்கள் கலந்து கொள்ளவில்லையே, ஏன்?"**

ஆசிரியர் போராட்டங்களில் ஒவ்வொரு சமயத்திலும் உரிய பங்கை நான் வகித்து வந்திருக்கிறேன். அண்மையில் நடந்த ஆசிரியர் போராட்டத்தில் சிறை செல்லவில்லையே தவிர, வேலை நிறுத்தம் ஒருங்கிணைப்பு மற்றும் பிற நடவடிக்கைகளிலும் கலந்து கொண்டேன்.

எங்கள் கல்லூரி ஆசிரியர் சங்கத்தின் தலைமை 'சிறை செல்லாமல் வெளியே இருந்து செய்யக் கூடிய பணிகளைச் செய்யுமாறு எனக்குக் கட்டளையிட்டது' எங்கள் தலைவர்களுக்கு இது தெரியும். சாட்சிகளை சேகரிக்க வேண்டிய கட்டாயம் எனக்கில்லை. கோவையில் நான் பணியாற்றிய போது ஆசிரியர் போராட்டத்தில் மிகவும் தீவிரமாக ஈடுபட்டு "கொலை முயற்சி வழக்குகள்" என்மீது போடப்பட்டு, தமிழகம் முழுவதும் இருக்கிற ஆசிரியர்கள் அதைக் கண்டித்துப் போராடும் நிலை ஏற்பட்டது. எனவே, ஆசிரியர் போராட்டத்தில் நான் கலந்து கொள்ளவில்லை என்ற தகவல் தவறானது.

**உங்களுடைய அரசியல் பின்னணி என்ன?**

எனக்கு அரசியல் பார்வைகள் உண்டு. பின்னணி கிடையாது. ஏனென்றால் எப்போதும் நான் முன்னணியிலேயே இருக்க விரும்புகிறவன்.

**"அக்னி" என்று இப்போது புதிதாகத் துவக்கப்பட்ட "தேச ஒற்றுமைப் பாதுகாப்பு இயக்கத்தில்" செயற்குழு உறுப்பினர் என்கிற முறையில் நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

FREE E - BOOKS , www.thamizham.net.,

தேச ஒற்றுமையை உருவாக்குவது என்பது தேச ஒற்றுமைக்கு உரிய சூழலை உருவாக்குவது ஆகும். "ஒன்று படுவதற்குரிய சூழலை உருவாக்காமல் ஒருமைப்பாட்டை வலியுறுத்த முடியாது" என்பதை நான் உரத்தகுரலில் சொல்லி வருகிறேன்.

**கவிதைகள் எழுதுவது மட்டுமே உங்கள் பணியா? இப்போது கவிதைகளின் வேகம் உங்களிடம் குறைந்து போயிருக்கிறதென்பதும், சமகால பின்னணியின்மையும் காணப்படுகிறதென்பது உண்மையா?**

வெந்து போனவர்கள் என்னை வேகமில்லாதவன் என்று சொல்வார்கள். என்னோடு போட்டியிட்டு நொந்து போனவர்கள் எனக்குச் சமகால உணர்வில்லை என்று சத்தியத்திற்குக் குழி தோண்டுவார்கள் கவிதைகள் எழுதுவது மட்டுமே நான் செய்து வரும் பணி எனக்கருதி—நான் இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்பதை உணராமல் அல்லது உணர்ந்தாலும் அதை ஒப்புக் கொள்ளாத உன்மத்தம் பிடித்தவர்கள் நெஞ்சறியப் பொய் சொல்கிறவர்களைப் பற்றி நான் கவலைப் படுவதில்லை.

**ஜெயகாந்தனுக்குப் பிறகு இந்திப்பிரச்சாரச் செயலாளராக எழுத்தாளர் லட்சுமி புறப்பட்டிருக்கிறாரே, இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

அரசியல் தலைவர்கள் பிரச்சாரம் பண்ணித் தோற்றுப் போன பிறகு, இந்திப் பிரச்சாரத்துக்கு இப்போது எழுத்தாளர்களை இயக்கி விட்டிருக்கிறார்கள் முதல் பலியாக ஜெயகாந்தன் தன் முகவரியைத் தொலைத்திருக்கிறார். அடுத்த பலியாக லட்சுமி தன்னுடைய அடையாளத்தை இழந்து கொண்டிருக்கிறார். தமிழை இவர்கள் புறக்கணித்தால், இவர்கள் எழுதிய தமிழை மட்டுமல்ல, இவர்களையும் சேர்த்து தமிழகம் புறக்கணிக்கும் என்று எச்சரிக்கிறேன். — ரசிக்

2400 சதுர அடி வீட்டுடன் கூடிய மனை—பெரம்பூர் லோகோ ரயில் நிலையம் அகரம் பெரியார் நகர் அருகில் விற்பனைக்கு உள்ளது.

கோவை மாவட்டம் உடுமலை அருகில் (பழனி ரோடு) 75 சென்ட் இடம் பவர்லூம்; பள்ளிக்கூடம், வீடுகள் அமைக்க ஏற்றது தொடர்புக்கு :- சுட்டி 1494, அண்ணாநகர், சென்னை-600 040. ADVT.

FREE E - BOOKS , www.thamizham.net.,

## சுதந்திரத்திரைப் படம்

சுதந்திரத் திரைப்படம்
வெள்ளி விழா தாண்டி
வீறு நடை போடுகிறது
ஆனால்,
கல்லாப் பெட்டியில்
காசைக் காணோம்
வசூலை அவரவரே
வைத்துக் கொண்டார்
கள்

...கௌதமன்

## கைதிகள்

ஏழையின்
உடையின்
ஆடைகள் கூட
ஆயுள் கைதிகள்

—கவிதாசன்

## தேவை

சுதந்திரத்தை
என்னால்
சாப்பிட முடியவில்லை
சோறு கொடு

—தமிழன்பன்

## காந்தி அஞ்சலி

காலை நேரம்
கள்ளுக்கடை வானொலி
கத்திக் கொண்டிருந்தது
காந்தி அஞ்சலி!

...மதுக்கூர் ராமலிங்கம்

## சுற்றுலா

ஒட்டிய வயிறுகளின்
சுருக்கங்களில்தான்
தலைவர்களின்
பயணத்திற்கான
தண்டவாளங்கள்
போடப்படுகின்றன.

...பிருந்தாசாரதி

## வழுங்கினாலென்ன?

துலங்கும் கடற்கரைச்
சாலையை
அரசினர்
தூய்மைப்பகுதியாய்த்
தெரிவித்து விட்டனர்
விளங்கும்
சட்டமன்றப்பகுதியை
வாய்மைப்பகுதியாய்
வழங்கினாலென்ன?

—ஏர்வாடி எஸ். ராதாகிருஷ்ணன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

## சுரண்டல்

அன்று
அவனது கனவில் ஒரு
அரசியல்வாதி வர
காலை கண் விழித்த போது
தலையணையையும்
போர்வையையும்
காணவில்லையாம்?

—கோவை கிருபாகரன்

## சண்டை சபை

அரசியல் சாசனத்தை
அடித்துத்திருத்துங்கள்
சண்டை தெரிந்தால் தான்
இனிச்
சட்டசபை உறுப்பினர்

—மதுக்கூர் ராமலிங்கம்

## உண்ணாவிரதம்!

மகாத்மாவே...
அன்று நீர்
உண்ணாவிரதமிருந்தே
சுதந்திரம் வாங்கித்
தந்தமையால்தான்
இன்று நாங்கள்
இப்படி
உண்ணக்கிடைக்காமல்
பட்டினிக்கிடக்கிறோமோ?!!

— இரா.நடராசன்

## அடிப்படை ஊதியம்

அடிப்படை ஊதியமே
லஞ்சம் தான்
முதல் தேதி வாங்குவது
வெறும்
பஞ்சப்படியே!

—கௌதமன்

## தீப்பெட்டி!

உரசியவனை
எரித்துவிட்ட
கற்புக்கரசி!!

—இரா.நடராசன்

## இது குப்பைத்தொட்டி

அமைக்கப்படதென்னவோ
எச்சில் இலைகளும்
குப்பைகளும் எறியத்தான்
ஆனால்,
நம் நாட்டில்
இதுவே பலருக்கு—
"டைனிங் டேபிள்"

—அன்வர்ஷாஜி

FREE E - BOOKS , www.thamizham.net.,



இந்த சிலைக்கு நூறு வயது முடிந்து விட்டது. அமெரிக்காவின் முக்கிய நகரங்களில் ஒன்றான நியூயார்க்கில் புதுப்பிக்கப்பட்ட இக்சிலையை அமெரிக்க ஜனாதிபதி ரீகன் கடந்த நான்காம் தேதி திறந்து வைத்தார். பிரான்ஸ் பிரதமர் ஜேக்ஸ் சீரக் பிரதம விருந்தாளியாகக் கலந்து கொண்டார்.

15 ஆயிரத்திற்கு மேற்பட்ட போலீஸாரால் கூட கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு சுமார் 15 லட்சம் மக்கள் சுதந்திர சிலையின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டார்கள்.

பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்த எட்வர்ட் ரானே என்ற பேராசியரின் கற்பனைக் குழந்தையான இந்த சிலைக்கு உருவம் கொடுத்து உலக அதிசயங்களில் ஒன்றாக ஆக்கியவர் பிரட்ரிக் அக்ஸ்டே என்ற சிற்பியாவார்.

151 அடி உயரத்தில் உருவாக்கப் பட்டுள்ள இச்சிலை அமெரிக்க அரசுக்கு நட்புறவு பரிசாக அளிக்கப்பட்டது.

முள்கிரீடம் அணிந்து, ஒளிவிளக்கை கையில் ஏந்தி கம்பீரித்து நிற்கும் இச்சிலையின் எழிலும் பொலிவும் எண்ணற்ற மைல்களுக்கு அப்பாலும் ஒளிரக் கூடியது.

இச்சிலையைப் புதுப்பிப்பதற்கு மட்டும் சுமார் 75 கோடி ரூபாய் செலவாகியுள்ளது.

சுதந்திரத்தின் உண்மையின் அவதாரமாகக் கருதப்படும இந்த நீதி தேவதை இன்றைய அமெரிக்காவில் வெறும் அலங்காரப் பொருளாகவே இருந்து வருகிறது.

பல்வேறு நாடுகளின் விடுதலை இயக்கங்களை நசுக்கியும், மனித குலத்தையே பூண்டோடு ஒழித்துக் கட்ட உலகப் போரை துவக்கியே தீருவோம் என்ற வன்முறை அலைக் கக்கியும். பலலாயிரக்கணக்கான மக்களை கொன்று குவித்து வரும் தென்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# ஒரு தேவதையின் குமுறல்

ஆப்பிரிக்க-பாகிஸ்தானிய இஸ்ரேலிய பாசிஸ அரசுகளைப் பாதுகாத்து வரும் அமெரிக்க அரசின் அடாவடித்தனங்களை சகித்துக் கொள்ள முடியாமல் தான் இந்த சிலை குமுறி அழுதிருக்கிறது. விரிசல்களும், வெடிப்புகளும், அககுமுறலின் அடையாளமென்றே தோன்றுகிறது.

இப்போது மீண்டும் சுதந்திர சிலை புதுப்பிக்கப்பட்டு இருக்கிறாள். சிலை தான் புதுப்பிக்கப் பட்டிருக்கிறதே தவிர அமெரிக்காவின் ஆரம்ப கால லட்சியங்கள் புதுப்பிக்கப் படவில்லை. இந்த நிலை நீடித்தால் எத்தனை கோடி டாலர் செலவு செய்து பழுது பார்த்தாலும் தன்னைச் சுற்றி நிகழும் கொடுமைகளைக் காண சகியாது தானாகவே வெடித்து தரை மட்டமாக ஒரு நாள் இது சரிந்து விடும் போலிருக்கிறது.

—டி. எஸ் ரவீந்தரதாஸ்

ஏஜெண்டுகள் தேவை

தரமான
"தாஜ் மஹால்"
சுகந்த சுபாரி
பாக்குத்தூள்

"ஓமக்ஸ்"
கிளீனிங் பவுடர்
ஆகியவற்றை
விற்பனை செய்ய
தமிழக மெங்கும்
ஏஜெண்டுகள்
தேவை.

விபரங்களுக்கு:
M/S
லெட்சுமி - கல்யாண்
ஏஜென்சீஸ்
19, ஜானிஜான் கான் ரோடு,
சென்னை-600014.
போன்: 846382

FREE E - BOOKS , www.thamizham.net.,

"அண்ணா சமாதி" பற்றி மிக அக்கறையாக எழுதியிருக்கும் தாங்கள், இந்த நாட்டில் உள்ள பல்லாயிரக்கணக்கான கோயில் களுக்குச் செல்லும் போது செருப்பை வெகு தொலைவில். முதல் வாயிலிலேயே விட்டு விட்டு, பல நீண்ட பிர காரங்களையும், மற்ற இடங்களையும் வெய்யிலில் குழந்தை குட்டிகளுடன் தவிப் போடு சுற்றி வருகிறார்களே, அந்தத்தவிப்பையும் அவதியையும் எழுதுங்கள்.

பொன். இராமச்சந்திரன்
பம்மல், சென்னை-75.

---

ஜெயகாந்தானின் நாடித் துடிப்பை கனகச்சிதமாக அறிந்து வந்து எழுதப்பட்ட கட்டுரை.

—பி. எல். பரமசிவம்
மதுரை-1.

---

ஜெயகாந்தன் இப்பொழுது சோஸலிச ஜனநாயக-பணநாயக வாதியாகி விட்டார் என்பதால் அவர் மூக்கை உடைத்தது சரி தான்?

இராஜ. வேலுசசாமி
கருத்தனேந்தல்



வைரமுத்துவை வசை பாடாது ளர்ச்சிக்கான கசையடி தந்திருப்பது மெச்சத்தக்கது.

ஆர். பிரேம்குமார்
குலசேகரம்-629 161.

---

"2001/-ல் விலை வாசி எப்படி இருக்கும்" என்று இப்பொழுதே போட்டு, எங்களின் மன நிம்மதி யைப் போக வைத்து விட்டீரே, நியாயமாசார்?

—எல். ஆர். விஜயகுமார்
சென்னை-28.

---

அரசியல் வாதி கொள்ளைக் காரனாக மாறும் போது கொள் ளைக் காரன் அரசியல் வாதியாக மாறினால் என்ன என நினைக் கும் பீகார் மக்களின் ஞானோத யத்தைக் கண்டு அசத்து விட் டேன். வாழ்க ஜனநாயகம்.

—எம். பஷீர்
ஹைதராபாத்.

---

"மெரீனா முதல் குமரி வரை மீனவர்கள்" தொடர் வர லாற்றோடு இணைந்து வருவது விறுவிறுப்பூட்டுகிறது. நிகழ்ச்சி கள் மனம் நெகிழ்ச்சியடையச் செய் கிறது.

—மு. இளவரசு
நல்லாலம்.
வ. ஆ. மா. 604 404.

விட்டமின்கள் மாதிரி வேறு சில மூலகங்களும் உடலுக்கு மிகவும் தேவை. பொட்டாசியம் இதில் ஒன்று. மனித உடலுக்கு மிகத் தேவையான ஆக்சிஜனை உடல் முழுவதும் கொண்டு செல்லும் பணியை பொட்டாசியம் செய்கிறது. இதயதசைக்கு சக்தியூட்டி, நுரையீரல் விரிந்து உடலுக்கு அதிக ஆக்ஸிஜன் கிடைக்க பொட்டாசியம் உதவும்.

பொட்டாசியம் குறைந்தால் கீழ்க்கண்ட தொல்லைகள் ஏற்படும் :

* தசைகள் வலுவிழக்கும். அளவுக்கு மீறிய சோம்பேறித்தனம் ஏற்படும்.
* இதயத் தசையே பாதிக்கப்படும்.
* தூக்கமின்மை ஏற்படும்; மனக்குழப்பம் ஏற்படுத்தும்.
* காயங்கள் ஆற தாமதமாகும்.
* வலி ஏற்படும் போது, அதன் உணர்வு அதிகரிக்கும்.
* தலை வழுக்கை ஏற்படக் காரணமாகும்.
* தோலில் ஊசி குத்துவது போன்ற உணர்வை ஏற்படுத்தும்.

மனித உடலில் 0.35% பொட்டாசியம் உள்ளது: ஒரு நாளைக்கு 5.3 கிராம் பொட்டாசியம் சராசரி வயது மனிதனுக்குத் தேவை.

நாம் வழக்கமாக உண்ணும் உணவுகளில் பொட்டாசியம் நம் உடலுக்குத் தேவையான அளவு கிடைத்து விடுவதால், பொட்டாசியக் குறைபாடு எளிதில் ஏற்பட்டு விடாது. ஆனால் அதிகமான வயிற்றுப்போக்கு, கடும் வாந்தி, சிறு நீரகக் கோளாறுகள், சில மருந்துகளால் ஏற்படும் துணை விளைவுகளின் காரணமாகவே பொட்டாசியம் பற்றாக்குறை ஏற்படும்.

இந்தக் குறைபாடு ஏற்பட்டவுடன் மருத்துவரை கலந்தாலோசித்து பொட்டாசிய உப்பு கலந்துள்ள மாத்திரைகளை உடனடியாக உண்ண வேண்டும்.

கடற் உணவுகள், மாங்காய், உலர்ந்த அத்திப்பழம், தேன், மூலிகை தேநீர், திராட்சை இவற்றில் நிறைய பொட்டாசியம் உண்டு.

முட்டைக்கோஸ், காலிபிளவர், தக்காளி, காரட், வெங்காயம் இவற்றிலும் பொட்டாசியம் உண்டெனினும், அவற்றை நாம் வேக வைத்து உண்ணும் போது 50% பொட்டாசியம் அழிந்து விடுகிறது.

—சித்தன்

[அடுத்து : நமது பாஸ்பரஸ் மருத்துவம்]

FREE E - BOOKS , www.thamizham.net.,



# போலீஸ் குற்றம் செய்தால்...



'பெரிய அளவில் திட்டமிட்டு செயல்படும் கொள்ளைக் கூட்டமே நமது போலீஸ் பட்டாளம்' என்று சில ஆண்டுகளுக்கு முன்பு அலகாபாத் உயர்நீதி மன்ற நீதிபதி ஒருவர் கூறியுள்ளார்.

அன்றாடம் நமது போலீசார் தமது 'கடமையை' செய்யும் போது செய்யும் குற்றங்கள் ஏராளம். போலீசாரின் அத்துமீறல்களைச் செய்தித் தாள்களில் படிக்கிறோம். ஆனால் சட்ட ரீதியாக அவர்கள் தண்டிக்கப்படுவது அரிதான நிகழ்ச்சியே. காரணம் இந்திய அரசியல் சாசனத்தில் 'போலீசார் செய்யக் கூடாத குற்றங்கள்' என்று எதுவும் சொல்லப் படவில்லை.

பொதுமக்கள் குற்றம் செய்த போலீஸகாரருக்கு தண்டனை வழங்க வேண்டும் என்று கூச்சலிட்டால் செய்தித் தாளில் இச்செய்தி வெளியாகி அந்த போலீஸ்காரர் சில காலத்திற்கு வேறிடத்திற்கு மாற்றப்படுவார்—அதே ஊதியம் இடமாற்ற சலுகை பிற சலுகைகளோடு பொதுமக்கள் இந்நிகழ்ச்சியை மறந்தபிறகு மீண்டும் பழைய இடத்திற்கே வந்து விடுவார்.

கடந்த மாதம் டெல்லியில் ஒரு ஹவில்தாரும், ஒரு கான்ஸ்டபிளும் ஒரு வியாபாரியிடமிருந்து ரூ 70,000ஐத் திருடி விட்டனராம். பிடிபட்டதும் பணத்தைக் கொடுத்து விட்டு இச்செய்தி பற்றி யாரிடமாவது சொன்னால் உன் குடும்பமே அழிந்து விடும் என்றும் மிரட்டியிருக்கிறார்கள்.

குற்றம் செய்யும் எந்த அரசு ஊழியரும் மாற்றப்பட்டால் கூட அவரது சம்பளப்படிகள் சரியாகவே தரப்படுகின்றன. இதில் பாதிப்பு இல்லாததால் தண்டனையும் அவர்களுக்கு எளிதாகவே தோன்றுகிறது. அவர்கள் குற்றம் பகிரங்கப் படுத்தப்பட்டு, பரிகசிக்கப்பட்டு சலுகைகள் குறைக்கப்பட்டாலொழிய அவர்கள் திருந்த மாட்டார்கள்.

—இலா

FREE E - BOOKS , www.thamizham.net.,

# போதைப் பித்தனை கவனியுங்கள்

போதைப் பொருட்களின் வீரியத்தையும், மற்ற விவரங்களையும் சேகரிக்கும் ஆராய்ச்சியாளர்கள் ''இப்படி அடிமையானவர்களில் பெற்றோர்களால் செல்லப்பிள்ளையாக வளர்க்கப்பட்ட குழந்தைகளே அதிகம்'' என்கிறார்கள்.

இப்படி 'ப்ரவுன் ஷுகருக்கு' அடிமையாகிப் (Addict) போனவர்களை இனம் கண்டு கொள்ள, ஆராய்ச்சியாளர்கள் சில அறிகுறிகளையும் சொல்கிறார்கள்.

அவை:

1 சம்பந்தப்பட்ட நபரின் உணவு, உறக்க பழக்கங்களில் மாற்றம்

2 பசி இல்லாமல் இருப்பது

3 திடுமென இது நாள் வரை பழகி வந்த நண்பர்கள், உடை உடுக்கும் முறையில் மாற்றம்

4 இனிப்புகளில் கூடுதலான ஆசை



5 ஒரு கணம் கலகலப்பாக இருப்பவர், சட்டென்று மௌனிப்பது (Becomes Moody)

6 கண்களில் சோகத் தோய்வு, வாய் கொஞ்சம் திறந்தே இருக்கும்

7 பேச்சில் திக்கலோ குரல் பிசிறடிப்போ இருக்கக்கூடும்

8 அடுத்த வேளைக்கு [illegible] இல்லை என்கிற போதும், போதை தேவைப்படும் போதும், இருப்புக் கொள்ளாமை, படபடப்பு இருக்கும். பலர் மூர்க்கமாகக் கூட நடந்து கொள்வார்.

9 [illegible] வென்று [illegible]

10 உடம்பை அரித்துக் கொள்வது [illegible] பழக்கம்

11 அடிக்கடி தனி அறையில் தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்வது

12 வீட்டுப் பணம், பொருட்கள் காணாமல் போவது

FREE E - BOOKS , www.thamizham.net.,

## விமர்சனம் அரசு

முப்பது வாரங்கள்தான் தாங்கும். பிறகு போரடித்து விடும். சுஜாதா தொடர்கதையை முடித்துக் கொள்வார் சாண்டில்யனால் இரண்டு வருடங்களுக்கு மேல் கதையை இழுக்க முடியாது. மற்றவர்கள் கதியும் அப்படித்தான்.

ஆனால் ஜனரஞ்சக இதழ்களில் சில பகுதிகள் போரடிப்பதில்லை. அரசு பதில்கள் அவற்றில் ஒன்று. குமுதம் சுவையான மசாலா கலவை என்பதற்கு அரசு பதில்கள் வெளியாகும் மூன்று பக்கங்கள் சான்று. யார் இந்த அரசு? பலவித வதந்திகள் உண்டு. அ-அண்ணாமலை, ர-ரங்கராஜன்,; சு-சுந்தரேசன் மூவரும் சேர்ந்துதானே? என்று வாசகர் ஒருவர் வினவியிருந்தார். கற்பனை வளத்துக்கு பாராட்டு என தெரிவித்து இருந்தார் அரசு. ரா. கி. ரங்கராஜன், ஜ. ரா. சுந்தரேசன் இவர்கள் இருவருக்குமே அரசு அண்ணாமலை தான். எனவே, அரசுவை நாம் குமுதம் ஆசிரியராகக் கொள்வோம்.

அரசுவிடம் வாங்கிக் கட்டிக் கொள்ள கேள்வி கேட்கும் கும்பல் ஒன்று இருக்கிறது. இவர்கள் திட்டினாலும் குட்டினாலும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கிறார்கள்.

அரசு சகலகலா வல்லவர். 'இன்னா கேள்வி நயினா. தேர்தல் கீதா, அல்லாருக்கும் ஒட்டு கீதா! (23-01-86 குமுதம்) என்று சென்னை பாஷை பேசத்தெரியும். நாட்டுப்பற்று மொழி பற்று இதில் எது முதல் வேண்டும்? என்ற கேள்விக்கு 'மி' என்று ஒரே எழுத்திலும் பதில் சொல்லத் தெரியும். (23-01-86) பக்க பதில்களும், பாராகிராப் பதில்களும் உண்டு.

மாநகராட்சித் தேர்தல்கள் இப்போதைக்குக் கிடையாதாமே இதற்கு பதில்; க. கெ. பி. கூ. ந.? (1 05-86) இப்படிக் குழப்பவும் தெரியும். அரசுவிற்கு நிரம்ப நகைச்சுவை உணர்வும் உண்டு.

மதுரை தீப்பற்றி எரியும்போது மாதவி என்ன செய்து கொண்டிருந்தார்? என்ற கேள்விக்கு இலக்கியங்களைத் துப்பறிகிறார். குட்டிக் கதை சொல்வதிலும் இவர் கெட்டிக்காரர் நீர் 'அந்த' விஷயத்தில் மிதவாதியா? தீவிரவாதியா? அரசு; யதார்த்தவாதி. இப்படி. செக்ஸ் பதில்களும் உண்டு. நடிகைகளின் நாக்கை ஒப்பிட வேண்டுமா? இரண்டு வேறுபட்ட படங்களை ஆராய வேண்டுமா? அரசுவை அணுகுங்கள்.

FREE E - BOOKS , www.thamizham.net.,



சில காலம் வரையில், திராவிட இயகக நாடக நடிகர்களிடம் (நாடக நடிகர்களிடம் மட்டும் தான்—சினிமா நடிகர்களிடம் அல்ல) சமூக உணர்வு இருக்கிறது.

1952இல் தி.மு.கவில் சேர்ந்த எம். ஜி. ராமச்சந்திரன், 1972 அக்டோபர் வரை கழகத்தில் தான் இருந்தார். மாநில பொருளாளராக இருந்தார். ஒரு போராட்டத்தில் கூட கலந்து கொண்டதில்லை.

எஸ். எஸ். ராஜேந்திரன் ஒரே ஒரு முறை ஜெயிலுக்குப் போய்விட்டு, சில நாட்களில் 'மன்னிப்புக் கடிதாசி' எழுதிக் கொடுத்து விட்டு விடுதலையாகி வெளிவந்து விட்டார்.

அவர்—

புரட்சி நடிகர்

இவர்—

இலட்சிய நடிகர்

இவர்களையெல்லாம் பாதுகாப்பதற்கென்றே தி. மு கழகத் தலைவர் அண்ணாதுரை ஒரு விதி விலக்கை ஒவ்வொரு போராட்டத்தின் போதும் அறிவித்தார். "போராட்டத்திலிருந்து கலைஞர்களுக்கு விதி விலக்கு அளிக்கப்படுகிறது.

திரைச்சுவையில் அறந்தை நாராயணன்

---

கேள்வி பதில் பகுதிகளின் நோக்கம் என்ன? அறியாத விஷயங்களை அறிவது. புரியாத எண்ணங்களைத் தெளிவது அரசு பதில்கள் உண்மையிலேயே வாசகனுக்கு சேவை செய்கிறதா? இல்லை! வாசகனை திருப்திப்படுத்துகிற வேலையை நன்றாகச் செய்கிறது. அக்குள்களில் விரலை நுழைத்து கிச்சுகிச்சு மூட்டுவது. மனசின் நமைச்சல்களை சொரிந்து விடுவது. இப்படி .. பல வேலைகளை அதி அற்புதமாகச் செய்கிறார் அரசு.

●●கே : அரசு பதில்களின் குறைகள் களையப்படுமா?

ப : டாது.

...நா. தென்னிலவன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# துணிவே துணை

இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் துன்பம் இல்லாது இல்லை. துன்பம், தோல்வி இவைகள் இல்லாத வாழ்க்கை அர்த்தமற்ற வாழ்க்கையாகி விடும். இதுபோன்ற அனுபவங்களில் தான் வாழ்க்கை சுவைக்கும்...

துன்பத்தை எதிர்த்து நின்று போராடி வெற்றிக் கொள்வதே பகுத்தறிவு உள்ள மனிதனுக்கு அழகு.... சதா நடந்ததை நினைத்து வருந்துவதால் நாம் பொன்னான நேரத்தையும், காலத்தையும், நாட்களையும் விரயம் செய்து வருகிறோம் என்று அர்த்தம். பல துறைகளில் சுறுசுறுப்போடு இயங்கி வரும் மலைநாட்டில் பிறந்துள்ள நமக்கு காலத்தை நன்மையான செயல்களில் கழிப்பதே சிறப்பைத் தரும்.

தோல்வி நிறைந்தால் தான் வாழ்க்கை இலக்கணமாகி ஒருவித ஆழமான பிடிப்பு ஏற்படும். வீட்டுக்கு வீடு வாசற்படி இருப்பது எத்தனை உண்மையோ அது போன்று தான் வெற்றியும் தோல்வியும். நடந்து போனதைப் பற்றி வருத்தப்படுவதை விட்டு விட்டு இனி நடக்க போவதை பற்றி திட்டங்கள் போட வேண்டும்.

வாழ்க்கையில் நமக்கு சலிப்பு ஏற்படுகிறது என்றால் துணிவு சக்தி குறைகிறது என்று தான் அர்த்தம். வாழ்க்கையில் நாம் எதையும் இழந்து விடலாம். ஆனால் துணிவை மட்டும் இழந்து விடக் கூடாது.

ஆனந்தம் என்பது போராட்டத்தில் தான் இருக்கிறது என்கிறார் மகாத்மா காந்தி... போராட்டம் நிறைந்த வாழ்க்கையை இன்பமானதாக ஆக்கி கொள்வது என்பது நம்மிடம் தான் உள்ளது.

[redacted]

FREE E - BOOKS , www.thamizham.net.,

# யார் நாத்திகர்?

நண்பனின் திருமணம். திருத்தணி மலையில் திருமணம் முடிந்த பிறகு என் கூட வந்த நண்பர்கள் அனைவரும் கோயிலுக்குள் சென்று விட்டார்கள்—என்னைத்தவிர.

திரும்பிவந்த நண்பர்களில் ஒருவர் என்னைப் பார்த்துக் கேட்டார்.

"என்ன சார், நீங்க கோயிலுக்கு வரலையா? என்ன நாத்திகமா"?

நான் கூறினேன் :

"நீங்கள் தான் நாத்திகர்கள்" என்று.

"என்ன சார் சொல்றீங்க?" என்று புரியாமல் விழித்தார்.

பொறுமையாகச் சொன்னேன் :

நீங்கள் எல்லோரும் கோயிலுக்குள் சென்று என்ன வேண்டிக் கொண்டீர்கள்!?

நீண்ட ஆயுளைத் தர வேண்டும் .. பதவி உயர்வடைய வேண்டும் . பையன் பரீட்சையில் தேற வேண்டும்... செல்வந்தராக வேண்டும் .. இப்படித்தானே;?

அல்லது,

மூன்றாம் உலக நாடான இந்தியாவில் ஒருவருக்காவது நல்ல விஞ்ஞான அறிவைக் கொடுத்து, அதன்மூலம் இந்த தேச மக்கள் எல்லோரும் நன்மையடைய வேண்டும்...

வெறும் கோவணத்தை மட்டுமே கட்டிக் கொண்டு, ஆடு, மாடுகளைப் போல வாழும் இந்திய நாட்டின் கிராமப்புற ஏழை மக்களுக்கு ஒரு வேளை உணவாவது ஒழுங்காகக் கிடைக்க வேண்டும்...

ஏர் பிடித்து உழுபவனும், இரும்பை அடித்துப் பிழைப்பவனும், எத்தனை நாளைக்கு எங்களுக்கு உணவை அளித்து விட்டு அவன் பட்டினியால் வாடுவான்... அவனுக்குரிய பங்கை பெறக் கோரி போராட்டத்தின் மூலம் புதுப் பாதை காண வேண்டும்... என்றா?

கோயிலுக்குள் சென்று எதை வேண்டினீர்கள்?

ஆண்டவன் இருக்கிறான் என்பதும் உண்மையானால் நாற்றமடிக்கும் இதயங்களையுடைய உங்களைத்தான் நாத்திகன் என்று ஒதுக்கி விடுவார். மனித நேயங்களை நேசிப்பவர்களையே தன் பக்தனாக்கிக் கொள்வார்.—பூங்கணியன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

படியுங்கள்!

முகம்

எண். 18, 68வது தெரு, 11வது பிரிவு,
கருணாநிதி நகர், சென்னை-600 078.

● புதிய வகை 2 வண்ண அச்செழுத்துக்கள்
● எல்லா மொழி அச்செழுத்துக்கள்
● போஸ்டர் எழுத்துக்கள்
● எல்லா வித அச்சக உபகரணங்கள்

38, குட்டி தெரு, பெருமாள் பேட்டை, சென்னை-7. பேசி: 27087

கடந்த 400 ஆண்டுகளாக ஒரு துளி மழையைக்கூட காணாத இடம் தென் அமெரிக்கா சிலியிலுள்ள அடகாமா பாலைவனம் உலக வரலாற்றிலேயே இது வரை அதிக அளவு பஞ்சத்தால் வாடிய பகுதியும் இதுதான்.

புதுடில்லி லாஜபத் நகரில் வசிப்பவர் மாத்தூர். இவர் வீட்டில் 3 நாட்களாக காஸ் சிலிண்டரிலிருந்து காஸே வரவில்லை. சிலிண்டர் கனமாகவே இருக்கவே, மாத்தூர் தமது ஏஜெண்டிடம் புகார் செய்தார். சிலிண்டரை சரிபார்த்த ஊழியர் சிலிண்டரில் உள்ளது தண்ணீர்தான் என்று மாத்தூரின் சந்தேகததை உறுதிப்படுத்தினார்.

பரோடா அருகிலுள்ள அம்லா என்ற கிராமம் குடும்பக் கட்டுப்பாட்டில் 100/- வெற்றி பெற்று இந்தியாவிலேயே முதலிடம் பெறுகிறது. கடந்த 10 ஆண்டுகளில் இரண்டு குழந்தை பிறப்புகளே இக்பிராமத்தில் பதிவாகியுள்ளன. திருமணத்திற்கு முன்பே கட்டாயக் குடும்பக் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்ட கிராமம் போலும்!

அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் ரிட்மனு ஒன்றை தாக்கல் செய்த வக்கீல் ஒருவர் இந்தி, ஆங்கில வார்த்தைகள் ஒன்று கூட கலக்காத தூய சமஸ்கிருதத்தில் சட்ட விவரங்களை எடுத்து வைத்திருக்கின்றார். நீதிபதியும் தமது கேள்விகளையும், ரிட்மனு ஏற்பு உத்தரவுகளையும் அதே மொழியிலேயே விடுத்துள்ளார்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# சிறுகதை

# மருத்துவம்

குமரேசனுக்கு காலையில் இருந்து வயிற்று வேதனை தொடங்கி விட்டது. கால்கள் தளர்ந்து, உடம்பெல்லாம் அசதியாக இருக்கவே அன்று கூலி வேலைக்கு விடுமுறை போட்டு விட்டான்.

அவன் மனைவிக்கோ சங்கடமும், கோபமுமாக வந்தது. ஆனால் வேதனையால் வெந்து துடிக்கிற கணவனைப் பார்க்கிற போது கண்கலங்கிப் போயிற்று.

பக்கத்துப் பெட்டிக்கடைக்காரனிடம் வயிற்று வேதனைக்கு மாத்திரை கடன் வாங்கிக் கொடுத்து விட்டு எழுந்து புறப்பட ஆயுத்தமானாள்.

"சரோஜா! இன்னைக்கு ஒருநா எங்கூடவே இரு. என்னால தாங்க முடியலை" என்றான் அவன்.

"உங்கூட இருந்தா ராத்திரிக்கு புள்ளைங்க வெறும் பாத்திரத்தைத் தான் சாப்பிடணும்" 'முணுக்'கென்ற கோபத்துடன் எழுந்து வெளியேறினாள்—கையால் வேலைக்காக.

இவன் கடும் வேதனை முனகலுடன், பகல் பொழுதினை ஒரு மாதிரியாகக் கழித்துவிட்டான்.

இரவில் வேலை கழிந்து வீடு திரும்பியவளுக்கு கணவனின் துயரநிலை கண்களில் ஈரத்தை பிசுபிசுத்தது.

அவனை மெல்ல எழச்செய்து கைத்தாங்கலுடன் மெல்லிய இருள் விளையாடத் தொடங்கி இருந்த நகரினுள் நடந்து சென்று அரசு மருத்துவமனையை அடைந்தாள். கொஞ்ச நேரம் காத்திருந்த பின் டாக்டம் காண்பித்தாள்.

"குடல்புண் ஆரம்பிச்சிருக்கு .. சாப்பாட்டில் உறைப்பும், புளிப்பும் சேர்க்கவே கூடாது. முக்கியமா பாலும், பழமும் நிறைய சாப்பிடணும் .. பசிச்சு சாப்பிடாம இருக்கவே கூடாது கவலையே படக்கூடாது .. மாத்திரை, மருந்தைக்காட்டிலும் இதுதான் முக்கியம்" என்று ஏதோ 'உடம்பு சகதி' மாத்திரைகளுடன் அனுப்பி வைத்தார் டாக்டர்.

மறுநாள் காலையில் முடியாமல் இருந்தாலும், எழுந்து வேலைக்கு செல்லத்தயாரானான் குமரேசன். ராத்திரி ஒரு வேளைச் சாப்பாட்டிற்கும் கேடு வந்து விடக் கூடாதே!

—குன்றில் குமார்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# மெரீனா முதல் குமரி வரை மீனவர்கள் 6

பரம்பரையையொட்டியும், வாழும் சூழலையொட்டியும் பழக்கங்கள் ஏற்படுவதுண்டு; மனிதன் சில பழக்கங்களை தானே ஏற்படுத்திக் கொள்வதுண்டு. முதலாவது, சமுதாயப் பழக்கம்! இரண்டாம் நிலை, தனிமனிதப் பழக்கம்.

ஒவ்வொரு சமுதாயத்தையும் போலவே, மீனவச் சமுதாயத்திற்கும் சில பழக்க வழக்கங்கள் உள்ளன.

சட்டை அணியாமல், வேட்டியை வரிந்து கட்டிக் கொண்டு 'சாமக்கோழி கூவு முன்னே கடலுக்குப் போய், பொழுது சாய்ஞ்சு நெலா காயுறப்போ குடிசைக்கு வரும் மீனவர்களிடையே, நல்ல உடை அணிந்திருக்கும் நாகரிக ஆடவர்களைக் காண முடியாது.

வேர்வையின் நாற்றமும், மீன்களின் வாசமும் பழகி போனதால், அவைதான் அவர்களுக்கு மணம்; 'செண்ட்'—ஒரு துர்வாசனை.

அவர்களின் உணவுப் பழக்கமும் வித்தியாசமானது அவர்களில் சைவர்கள் இருக்க முடியாது; அசைவ உணவு இல்லாத நாட்களும் இருக்க முடியாது. அதிகாலைப் பொழுதிலேயே கடலுக்குச் சென்று விடும் அவர்களுக்குப் பழஞ்சோறு' தான் காலை உணவு. மதியத்திற்கோ, அந்தப் பழஞ்சோற்றின் மிச்சம். மதிய உணவை அவர்கள் உண்ணும் விதம் அலாதியானது. கடலில் ஆடிக்கொண்டிருக்கும் கட்டுமரத்தில் உட்கார்ந்தபடியே மதிய உணவை உண்டு விடுகின்றனர். கடல் நீரையே குடித்தும் விடுகின்றனர். ஆம் அந்த உப்பு நீரை அவர்களில் பலர் முகம் கோணாமல் குடிக்கின்றனர். மிகச் சிலர் கரையிலிருந்து காலையிலேயே குடிநீரையும் எடுத்து வருகின்றனர்.

முதன் முதலாகக் கடலுக்குள் போகின்றவர்களுக்கு, வாந்தி எடுத்தால், அவர்கள் கூறும் மருத்துவம் என்ன தெரியுமா? "கடல் நீரைக் கொஞ்சம் குடிக்க வேண்டும்" என்பதுதான்.

கடல் அவர்களின் நிலம். கடல் அவர்களின் தாய். கடல் அவர்களின் தெய்வம்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

கடலைவிட்டுக் கரைக்கு வந்துவிட்ட பின்பு, ஊருக்கு ஊர் மீனவர்களின் பழக்கவழக்கங்கள் மாறுபட்டுள்ளன.

அந்த மாறுபாட்டிற்கு அவர்கள் சார்ந்திருக்கும் மதங்களும ஒரு காரணம்.

சென்னையில் வாழும் மீனவர்களிடையே, பிறந்த நாளை கொண்டாடும் வழக்கம் தென்படவில்லை. ஆனால தூத்துக்குடி கன்னியாகுமரி மீனவர்கள் தங்களின் பிறந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். அங்கும், கிராமத்தை யொட்டியுள்ள மீனவர்கள், பிறந்த நாளைப் பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை.

கிறித்துவ மீனவர்கள், குழந்தை பிறந்த 40வது நாளில் 'ஞான நீராட்டு' நடத்துகின்றனர். செவ்வாய்கிழமை பிறந்த குழந்தைகளுக்கு 'அந்தோனி' என்ற பெயரும், புதன்கிழமை பிறந்த குழந்தைகளுக்கு 'ஜோசப்' என்ற பெயரும் சூட்டப் படுகிறது.

மற்ற சமுதாயத்தினரைப் போலவே, மீனவர்களும் இளைஞர்கள் காதலில் ஈடுபடுவதை விரும்பவில்லை. பெரியவர் கள் பார்த்துத்தான் மணம் முடிக்க வேண்டும் என்பதில் உறுதி யாய் உள்ளனர். கிறித்துவ மீனவர்கள், காதலில் ஈடுபட்டவர் களை, ஒரு சிறப்பான பூஜை நாளன்று, மெழுகுவர்த்தியைக் கையில் ஏந்தியபடி வாயிலின் இருபுறத்திலும் இருவரையும் நிறுத்தி விடுகின்றனர். ஆனால் அப்படி நிறுத்தப்பட்டவர்களில் பெரும்பாலோர், காதலில் மேலும் உறுதியாய் நின்றபோது, பெரியவர்களே சம்மதித்து, திருமணம் செய்து வைத்த நிகழ்ச்சி களையும் கூறுகின்றனர்.

விதவைக்கு மறுமணம் செய்வதில், ஒரு முற்போக்குத்தனம் தெரிகிறது. பொதுவாக, மீனவச் சமுதாயத்தில், விதவை மணம் தாராளமாக அனுமதிக்கப்படுகிறது.

ஒரு மீனவன் இறந்துவிட்டால், உடலை அடக்கம் செய்கிற வரை, யாரும் வேலைக்குச் செல்லக் கூடாது என்னும் கட்டுப் பாடு இன்னும் 'குலையன் கரிசல்' முதலான சில ஊர்களில் வழக்கில் இருப்பதாக, பேரா. முத்து குணசேகரன் கூறுகின்றார்.

ஆனால், பரபரப்பான சென்னை போன்ற நகரங்களில், அந்தக் கட்டுப்பாடும் தளர்ந்து போயிருப்பதைத்தான் காண முடிகிறது.

(தொடரும்) ...சுப. வீரபாண்டியன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# கேள்வி: சுட்டமு

# பதில்: சுந்தர ராமசாமி

## நாடு, மொழி, இன உணர்வுகள் பற்றிய மறுபரிசீலனை தேவையா?

நாடு, மொழி, இன உணர்வுகள் பற்றி ஆழந்த, விஞ்ஞான ரீதியான **மறுபரிசீலனையும் விரிந்த அளவில் விவாதங்களும் இன்று மிக மிகத் தேவை.** நாடு, மொழி, இன உணர்வுகள் சார்ந்து நம்மை இன்று ஆட்டிப் படைத்து முடக்கி கொண்டிருப்பவை இன்றைய கால உணர்வுகள் அற்ற, குறுகிய உணர்வு பூர்வமான கண்ணோட்டங்களே. உண்மையான பெருமைகளை தம்பட்டம் அடித்துக் கொள்வதிலும், சரித்திர உணர்வற்று கடந்த கால நிகழ்வுகளை மிகைப்படுத்துவதிலும், கட்டுக்கதைகளைச் சொல்லி பெருமை தேடிக் கொள்வதிலும் நம் ஆர்வங்களும் உழைப்பும் இன்று வீணாகிக் கொண்டிருக்கின்றன. இன்றைய அரசியல்-அறிவு-கலாச்சாரத் தலைமை தமிழ் மக்களின் அஞ்ஞானத்தைச் சுரண்டி வாழ்வதோடு, இந்த அஞ்ஞானத்தை முடிந்த வரையிலும் பாதுகாத்துக் கொண்டு போகும் தந்திரங்களும் கொண்டது. இந்தத் தலைமைக்கும் இருபதாம் நூற்றாண்டின் உலகப் பண்முக வளர்ச்சிக்கும் எவ்வித உறவும் இல்லை. பின்தங்கிப் போய் காலத்தின் முன் அழுகிக் கொண்டிருக்கும் கூட்டம் இது.

இன்றைய உலகம் மிக வேகமாகச் சுழன்று கொண்டிருக்கிறது. கணத்திற்கு கணம் தோறும் புது கண்டுபிடிப்புகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்தச் சவாலை எதிர்கொள்ள உலகெங்கும் வளர்ச்சி அடைந்த இனங்களும், நவீன மொழி பேசுவோரும் பெரும் தயாரிப்புகளிலும் கடுமையான உழைப்பிலும் ஈடுபட்டிருக்கின்றனர். தமிழ்த் தலைமையோ இந்தியப் பிரக்ஞையோ, காலப் பிரக்ஞையோ அற்று கிடக்கிறது. இந்தத் தலைமை, நம் மக்களிடம் அவர் தம் ஆளுமைகளைத் தூண்டி சவால்களை சமாளிப்பதற்கான ஆற்றல்களை நெறிப்படுத்துவதற்குப் பதிலாக பிற இனங்களிலிருந்தும், உலகத்திலிருந்தும் தங்களைத் துண்டித்துக்கொண்டு கிணற்றுத் தவளை மனோபவங்களை வளர்ப்பதற்கு உரமிட்டு வருகிறது.

FREE E - BOOKS , www.thamizham.net.,

காலத்திற்கேற்ப வளர்ச்சி பெறாமல் போகும்போது தோன்றும் தாழ்வு மனப்பான்மை தமிழ் இனத்தின் வேர்களை இன்று அரித்துக் கொண்டிருக்கிறது. பிறரது சாதனைகளுக்கு ஏற்ப நாம் செயல்பட முடியாது என்ற அச்சமும், போட்டியில் வெல்ல முடியாது என்ற கிலியும் தாழ்வுமனப்பான்மையிலிருந்து தோன்றுகின்றன. இந்த பலவீனங்கள் பழம் பெருமை வாய்ப்பந்தலாக வெளியே வந்து கொட்டுகிறது. உண்மையில் இன்று உலகத்தில் வாழும் எந்த மக்கள் செய்யும் சாதனைகளையும் நம் மக்களாலும் செய்ய முடியும். நம் மண்ணில் முளை விடாது என்று எண்ணத்தக்க உன்னதங்கள் எதுவும் இல்லை. சுரண்டி வாழும், அழுகிப் போன அஞ்ஞானிகளின் தலைமையிலிருந்து நம் மக்கள் விடுதலை பெற வேண்டும். அதற்கான கலாச்சாரப் புரட்சியை உருவாக்க வேண்டும்.

இன்றைய தலைமையின் தந்திரங்களினாலும் தமிழ் மக்கள் இந்திய உன்னதங்களையோ, உலக உன்னதங்களையோ (அறிவுத் துறைகள், விஞ்ஞானம், தத்துவம், இலக்கியம், சினிமா, இசை, ஓவியம் போன்ற துறைகள் சார்ந்த) அறியும் வாய்ப்பை முற்றாக இழந்து கொண்டிருக்கின்றனர். இந்திய உறவும் திட்டமிட்டு துண்டிக்கப்பட்டு வருகிறது. இந்த உறவுகள் வழியாக தமிழ் மக்கள் உன்னதங்களை அறியவும் அனுபவிக்கவும் நேர்ந்தால் தமிழ் அரசியல்-அறிவு கலாச்சார தலைமை தூக்கியெறியப்படும். அஞ்ஞானத்தைச் சுரண்டி கொழுத்துக் கொண்டிருக்கும் தலைமையின் பிழைப்பில் மண் விழும். ஒரு கலாச்சாரப் புரட்சியின் மூலம் இந்தப் புரட்சியை கிளர்ந்தெழச் செய்யும் உணர்ச்சியை, உன்னதங்களை தமிழ் மக்கள் அறிவதன் மூலமும் அனுபவிப்பதன் மூலமும் தான் ஏற்படுத்த முடியும். முறிப்பதற்கு மிகக் கஷ்டமான விஷ வட்டம் இது.

**இன்றைய உலக உன்னதங்கள் பற்றியும் இந்திய உன்னதங்கள் பற்றியும் அறிந்தவர்கள் இவற்றை தமிழ் மக்களின் மத்தியில் பரப்பி வாழ்வின் நெறிகளை முதன்மைப்படுத்தும் ஒரு கலாச்சாரப் புரட்சியை இங்கு உருவாக்க வேண்டும். ●●**

FREE E - BOOKS , www.thamizham.net.,

**சாதி மதங்களும் புதிய சனநாயகப் புரட்சியும்**
அ. மார்க்ஸ், விலை குறிப்பிடவில்லை.
மேற்கண்ட இரண்டும் வெளியீடு :- தோழமைப்பொறி
முகவரி : தோழமை, 20, கோதண்டபாணித் தெரு,
கும்பகோணம்-612 001.

**வீடியோ இயங்கும், விதமும் பராமரிப்பும்** (9-50)
T. M. சௌந்தரராஜன் M/s சங்கீதவாணி, 91, வி. எம். தெரு,
மயிலாப்பூர், சென்னை-600 004.

**டால்ஸ்டாய் வாழ்க்கையும், உபதேசமும்**
(11-00) கு. பா. ராஜகோபாலன் M/s அல்லயன்ஸ் கம்பெனி,
த பெ. எண் 617, மயிலாப்பூர், சென்னை-600 004.

**உதவிக்கரம்** தமிழ்நாடு உடல் ஊனமுற்றோர் நல்வாழ்வு
சங்கத்தால் வெளியிடப்படும் ஒரே தமிழ் மாத இதழ்
ஆசிரியர் :- சேலம் வீ. மருதமுத்து முகவரி 60, சாமி தெரு,
சென்னை-600 002. தனி இதழ் ரூ 2-00 ஆண்டு சந்தா
ரூ 20-00.

## எமக்கு வந்தவை

**அதிசய அண்டார்டிகா** (12-50) கு. ராஜாராம்
M/s ஐந்திணைப் பதிப்பகம், 282, பாரதி சாலை,
திருவல்லிக்கேணி, சென்னை-600 005.

**அறிவியக்கம் ஓராசிரியர் பள்ளிகள் சீரமைப்பு
மாநாடு சிறப்பு மலர்** ஆசிரியர் :- ச. நாத்திக நந்தனார்,
அறிவியக்கம் பேரவை, ஜி. எஸ். டி. சாலை, ஒட்டேரி,
சென்னை-600 048.

**திசைகள் எப்போது மாறும்?** கவிதைகள் (6-00)
வில்லவன் சி. ஜேசுராஜ், சிறுமலர் பதிப்பகம், கொடுங்குளம்,
மார்த்தாண்டம், குமரி மாவட்டம் 629 168.

**கூட்டு மீன் வளர்ப்பு** (22-00) டாக்டர் வி. சுந்தரராஜ்,
டாக்டர் சாமுவேல பாலராஜ், M/s ஸ்டார் பிரசுரம்,
72, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005.

**விநோத பறவை பெங்குயின்** (3-00)
டி. எம். சௌந்திரராசன் M/s மயிலவன் பதிப்பகம்,
7, எம். கே. அம்மன் கோயில் தெரு, மயிலாப்பூர், சென்னை-4.

**அப்பளம், வத்தல், வடாம், ஊறுகாய் செய்வது
எப்படி?** (4-00) திருமதி. சீதா M/s புத்தகப்பூங்கா,
29, நல்லண்ண தெரு, இராயப்பேட்டை, சென்னை-600 014.

FREE E - BOOKS , www.thamizham.net.,

இன்றைய இந்திய மனிதனுக்கு நான்கு வகையில் சிக்கல்கள் தோன்றி அவனைத் துவட்டி எடுத்துக் கொண்டே உள்ளன அவை :

# இன்றைய இந்தியன்

1. அவன் மனம்
2. அவனது சுற்றுப்புறம்
3. அவன் சார்ந்திருக்கும் கழகம்
4. அரசு

இவற்றுள் அவன் அறிந்தோ அறியாமலோ 'அரசு' என்ற அமைப்பு, அவன் தோள்களில் அமர்ந்து கால்களால் கழுத்தை வளைத்துப் பிடித்து 'சிந்துபாது கிழவன்' போல அவன் குரல் வளையை நெறித்துக் கொண்டுள்ளது. எப்போதாவது, அவன் திமிரினால், கதறினால், அவனுக்கு உதவுவதற்காகவே அவன் தோள்களில் அமர்ந்திருப்பதாக அரசு அமைப்பு, பசப்புகிறது. அவனுக்கு இந்த அரசப்பிடியினின்று விடுதலை கிடைக்குமா? கிடைக்க வேண்டும்.

அவன் பிறந்து வளர்ந்த சமூக அமைப்பு, சடங்கு என்றும், சம்பிரதாயம் என்றும் காலத்துக்கொவ்வாத இடைக்காலச் சம்மட்டிகளால் அவனை அடித்துக் கொண்டே இருக்கிறது.

திருமணம், 'அது', 'இது' செய்யச் செய்யும் சமூகம், அதனால் அவன் வீழ்ச்சியையும், தாழ்ச்சியையும் பார்த்துக் கைகொட்டிக் கேலி செய்கிறது. இதிலிருந்தும் அவனுக்கு விடிவு இல்லையா? விடிவு வந்தாக வேண்டும்.

இவற்றைப் போலவே, தன் சுற்றுப்புறத்தைச் சிறப்புறுத்திக் கொள்ளும் உரிமையும் அவனுக்கில்லை, அவன் ஒப்புதல் இல்லாமலே அவன் வீட்டிற்கு முன்னும், பின்னும் அடுத்த வீடுகளின் சாக்கடைகள் கரை புரண்டோடும். ஓடுகின்றன. குப்பைகள் நிரப்பப்படும்; நிரப்பப்படுகின்றன. இலாரி, பேருந்து ஆட்டோவில் நச்சுப்புகை, கறுப்புத் துகளோடு தூள் பரப்பும்; பரப்புகின்றன. அவன் வீட்டுச் சுற்றுச் சுவோரம் போவோர் வருவோரால் கழிப்பறைகளாக, சிறுநீர் சுமப்பான்களாக ஆக்கப்படும்; ஆக்கப்படுகின்றன. ஒலிப்பெருக்கியின் அலறல்கள், வானொலியின் பேரொலிகள், தொலைக்காட்சியில் பேச்சொலிகள் அவன் விரும்பாமலேயே அவன் அமைதியைக் கெடுக்கும்; கெடுக்கின்றன இவற்றால் பாதிக்கப்பட்டு நோயுற்றுச் சாக அவனுக்கு உரிமை உண்டே தவிர, சுற்றுப் புறத்தைக் கேட்க-தூயதாக்க அவனுக்கு வாய்ப்பில்லை.

முனைவர் : க. பா. அறவாணன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# போதைக்கு பச்சைக்கொடி
# பெண்களுக்கு சிவப்பு விளக்கா?

சேலம் என்றவுடன் முன்பெல்லாம் மாங்கனிதான் நினைவுக்கு வரும். இடையில் இரும்பாலையும் வந்தது. அதனால் இப்போது இந்தியாவிலேயே விபசாரத்தில் முன்னணியில் இருப்பது சேலம். பாலுறவு நோய்களில் 2ம் இடம் நமக்கு கிடைத்திருக்கிறது. இப்போது கூட 'எய்ட்ஸ்' பரப்புவதில் உலகச் சாதனை ஏற்படுத்தும் அளவில் முன்னேறிக் கொண்டு இருக்கிறோம். இவைகள் எல்லாம் ஆட்சியாளர்களுக்கு வேண்டுமானால் சாதனைகளாக இருக்கலாம். ஆனால் நமக்கெல்லாம் சோதனையாகவும் பெரும் வேதனையாகவும் உள்ளது.

'குடி குடியைக் கெடுக்கும்' விழுந்தால் வீட்டுக்கு இல்லையேல் நாட்டுக்கு என்ற கவர்ச்சிகரமான வாசகங்களின் துணையோடுதமிழகம் லாட்ரி, மது விற்பனையில் இமயமாய் உயர்ந்து உள்ளது. ஆனால் பத்து ரூபாய் கூலி பெறும் பாட்டாளி ஒருவன் அருகிலிருக்கும் மதுக்கடையில் 5 ரூபாயும், லாட்டரி கடையில் 2 ரூபாயும் கொடுத்து விட்டு வீட்டுக்கு வந்தால் அதுவும் 3 ரூபாயை தொலையாமல் எடுத்து வந்தால் அவனை நம்பியுள்ள மனைவியும், ஒரு வேளை சத்துணவுக்குப்பின் இரு நேர உணவை எதிர்பார்த்து ஏங்கி நிற்கும் இரு குழந்தைகளும் என்ன செய்ய முடியும்? கண்ணீர் விடுவதைத் தவிர! நெல்லை தஞ்சை போன்ற கழனிப் பிரதேசம் என்றாலும் பெண்களாவது வேலை செய்து ஒருக்கால் உணவை அடையலாம். ஆனால் சேலத்தில்? மின் வெட்டு, கதவடைப்பு நிறைந்து விட்ட இந்நாட்களில் மக்களுக்கு வழிகாட்ட வேண்டிய பொறுப்பில் உள்ளவர்களின் பதில் என்ன? விளம்பரம் மூலம், திரையுலக விழாககள் மூலம், நட்சத்திர இரவுகள் மூலம் பாமர மக்களை ஏமாற்றி ஒருக்கால் மீண்டும் ஏன் மீண்டும் மீண்டும் ஆட்சிக்கு வரலாம். ஆனால் 'எய்ட்ஸ்' நோயால் அகில உலகப் பெயர் தமிழகத்தை குறிப்பாக சேலத்தையும் நான்தான் ஆள்கிறேன் என்பது ஆட்சியாளர்களுக்கு அழகல்ல.

FREE E - BOOKS , www.thamizham.net.,

## இருளில் தேடாதே

## (நாடகத் திரைக்குப் பின்னால்)

மயிலாப்பூர் பைன் ஆர்ட்ஸ் கிளப் அரங்கத்தில் அண்மையில் "இருளில் தேடாதே" நாடகம் நடைபெற்றது. மூட நம்பிக்கைகளை வலுவாக எதிர்த்து, அறிவுப் பூர்வமான சிந்தனைகளுக்கு முக்கியத்துவம் தரும் வகையில் இந்நாடகம் இயக்கப்பட்டுள்ளது.

இந்நாடகத்தைப் பார்த்த ஒருவர் இதனை இயக்கியவரது முயற்சிகளைப் பாராட்டும் நோக்குடன் அவரைத் தேடி மேக்கப் அறைக்குச் சென்றார். அங்கு இயக்குனர் இந்நாடக நடிகயரை நிற்க வைத்து கையில் தேங்காயுடன் திருஷ்டி சுற்றிப் போடுவதைக் கண்டார்.

திரைக்கு முன்னும் திரைக்குப் பின்னும் எதிர்மாறான நிகழ்ச்சிகளைக் கண்டு அதிர்ச்சியடைந்த அந்த ரசிகர், கலை இலக்கிய வியாபாரிகள் சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களையும் வியாபாரப் பொருளாக்கி விடுவதை நினைத்து அந்த இயக்குனரைப் பாராட்ட நினைத்தது குறித்து வருந்தி திரும்பி விட்டார்.


**தமிழகமெங்கும் வீடுகள், வீட்டு மனைகள் வாங்க-விற்க, தொடர்புகொள்க: எம். வெங்கட், 24, திருவள்ளுவர் தெரு, இராமாபுரம், அம்பத்தூர், சென்னை-53.**


உடுக்கை இழந்தவன் கைபோல அரசு உடனே நடவடிக்கை எடுத்து சேலத்தில எரியும் சிவப்பு விளக்கை அணைக்க வேண்டும். தவறினால் சேலத்தோடு போட்டியிட்டு செங்கற்பட்டு, தர்மபுரி 'முன்னேறலாம்'. அப்போது "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண வேண்டும் என்ற அண்ணா கண்ணைத் திறந்தால் ஏழையின் வீடுதோறும் சிவப்பு விளக்குதான் தெரியக் கூடும். மொத்தத்தில் போதைக்கு பச்சைக்கொடி காட்டினால் அது பெண்களுக்கு சிவப்பு விளக்காகத்தான் முடியும் என்பதை அரசு இன்'மேலாவது உணரும்?

—து. ஆர்வில்ரைட்

FREE E - BOOKS , www.thamizham.net.,



**பரிசு ரூ.100/-**

## ஐயா, ஐடியா வேணும்:-
## "இலங்கைப் பிரச்சனைக்கு தீர்வு காண"

என்ற தலைப்பில், அப்பாவி தமிழ் மக்கள் சாவதற்கு காரணம் இல்லாமலும் அரசியல் ரீதியில் பிரச்சனைக்குத் தீர்வு காணவும் 'ஐடியா'.

*சிறந்த ஐடியா எழுதும் 5 வாசகர்களுக்கு ரூ 100/- பங்கிட்டு அளிப்பதுடன் 1 வருட* சுட்டி இதழ் **இலவசம்.**


இந்தக் கூப்பனுடன் கட்டுரை அனுப்பும் போது உங்கள் நண்பர்களில் 10 பெயர், முகவரியுடன் எங்களுக்கு அனுப்ப வேண்டிய முகவரி:

**சூப்பர் சூரியா** பரிசுத் திட்டம்-1
இந்தியன் மார்க்கெட்டிங் சென்டர்
மேலவாரி தெரு,
மண்ணச்சநல்லூர்- 621 005.

பெயர்:__________ முகவரி:__________

ஸ்டேட் இண்டஸ்ட்ரியல் பிராஜக்ட்
தயாரிப்பு: சூப்பர் சூரியா மூலிகைத் தைலம்
(குழந்தைகளும் பெரியவர்களும் உபயோகிக்கலாம்)


FREE E - BOOKS , www.thamizham.net.,





ஆசிரியர்: க.நாராயணபாரதி. வெளியிடுபவர்: க.ராமச்சந்திரன், அண்ணா நகர், (13-வது மெயின் ரோடு) சென்னை-600040. அச்சிடுவோர்: எஸ்.எம்.ரவீந்திரன், ரவீந்திரன் பிரஸ், 137, டாக்டர் நடேசன் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

FREE E - BOOKS , www.thamizham.net.,

வட்டு: மாத இதழ் ! 1986 Regd. No. TN/MS(N)/317
Licensed to post without prepayment Licence No. TN/MS(N)WPP-86

http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழம்



# A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcan production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonne to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distribu ing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousan farmers (a bulk of Whom are small and marginal farmers) and generatin gainful rural employment to over fifty thousand families in the primary secondary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development pr grammes (I) Sakthi High Sahool Provides a conducive environment fo study and development of rural children. (II) Sakthi Institute of Techn logy promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasa Hospital provides medical care for the region.

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District

FREE E - BOOKS , www.thamizham.net.,